பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை [22-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 322

# முப்படைகளின் நடவடிக்கை மண்டைதீவுடன் நிறுத்தமா?

## ராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, அக். 22

மண்டைதீவு மற்றும் தீவுப் பகுதிகளைக் கைப்பற்றியதோடு முப்படைத் தாக்குதல்களைத் தாம் நிறுத்திக் கொண்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. கொழும்பு ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலை நேற்று வெளியிட்டன.

தீவுப்பகுதிகளைக் கைப்பற்றியதோடு சண்டை முடிந்து விட்டதாக கொழும்பில் இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இராணுவம் தனது நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகவும் அந்த அதிகாரி சொன்னதாக இந்திய வானொலி தனது செய்தியில் தெரிவித்தது.

இதே வேளை—

தீவுப்பகுதியில் உள்ள படையினர் மீது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அகதி முகாம்களில் 9,000 குடும்பங்கள்

யாழ்ப்பாணம், அக். 22

கடந்த நான்கு, ஐந்து தினங்களில் வடமராட்சி, தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் நேற்று வரை சுமார் ஒன்பதினாயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள், அவர்கள் தங்கியுள்ள முகாம்களின் எண்ணிக்கை ஆகியன பற்றி யாழ். செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் — வடமராட்சியில் இருந்து 15 ஆயிரம் குடும்பங்கள் ஆரம்பத்தில் இடம் பெயர்ந்துள்ளன.

நேற்றைய நிலைமையின்படி அவர்களில் ஏழாயிரம் குடும்பங்கள் மட்டும் சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் அமைக்கப்பட்டிருக்கும் 38 முகாம்களில் தங்கியுள்ளன.

தீவகப் பகுதியில் இருந்து 1,963 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இவர்கள் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 19 முகாம்களில் தற்போது தங்கியுள்ளனர். (அ-5)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார இலவச உலர்உணவு

யாழ்ப்பாணம், அக். 22

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார இலவச உலர் உணவு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்திருக்கிறார்.

இடம் பெயர்ந்தவர்களில் நேற்று வரை தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளவர்களுக்கு, அந்தந்த இடங்களிலேயே அவர்களது ப. நோ. கூ. சங்கக் கிளை மூலம் இலவச உலர் உணவு விநியோகிக்கப்படும்.

யாழ். செயலகத்தில் நேற்று நடந்த அரச அதிகாரிகள், உதவி அரச அதிபர்கள் மற்றும் ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் பங்கு பற்றிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவிலும் ஊரடங்கு!

கொழும்பு, அக். 22

வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் நேற்று (திங்கள்) மாலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது. (உ-எ)

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, அக். 22

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ-117]

## வடபகுதி தளபதி காயம்?

மண்டைதீவைக் கைப்பற்றும் படையினரின் முயற்சியின் போது பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்றும்—

வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்னாவும் அவர்களில் ஒருவர் என்றும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்ததாக 'வெரித்தாஸ்' வானொலி நேற்று அறிவித்தது.

## தீவகத்தில் சிவில் நிர்வாகம் ஸ்ரீலங்கா அரசு அறிவிப்பு

மண்டைதீவு, எழுவைதீவு உட்பட தீவுப் பகுதிகளில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

— பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி இலங்கை வானொலி இவ்வாறு அறிவித்தது.

புங்குடுதீவு, எழுவைதீவு பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதையும், வைத்திய வசதி வழங்குவதையும் படையினர் உறுதி செய்வர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

## சிவில் நிர்வாகம் ஏற்படுத்த இறுதிக் கட்டத் தாக்குதல்!

### ஜனாதிபதி பிரேமா கூறுகிறார்

திருகோணமலை, அக். 22

வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதிலும் விரைவில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படும். அதன் பொருட்டு வடக்கில் இப்போது இறுதிக் கட்டத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

— இவ்வாறு அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி திரு. பிரேமதாஸா.

உப்புவெளி, சிறிதர்ம சமாதான நிலையத்தில் தாதுகோபுரம் ஒன்றை ஜனாதிபதி நேற்று முன்தினம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவுக்கு அப்பாலும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் உண்டு என்று மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ எனக்கு அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் யுத்த முயற்சிகள் முடிவை எட்டிக் கொண்டிருக்கின்றன. — என்றார்.

திருமலை விளையாட்டரங்கில் பேசுகையில்—

விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தினால் வென்றெடுக்க முற்படுவதை சாத்வீக முறையினால் வழங்க அரசு ஆயத்தமாக இருக்கி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கள சிவில் நிர்வாகத்தை முறியடிக்க அணிதிரள்வோம்

### புலிகள் பிரமுகர் பரா மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 22

யாழ். மாவட்டத்தில் பெரும் இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டு சிங்கள சிவில் நிர்வாகத்தை அமுல்செய்ய அரச திட்டமிட்டு செயல்படுகிறது. இதனைச் சகலரும் உணர்ந்து அத்திட்டத்தை முறியடிக்க அணிதிரளவேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா இவ்வாறு கூறியுள்ளார்.

திருமலை மாவட்ட முன்னாள் தளபதி லெப்டினன்ட் கேணல் சந்தோசத்தின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை அரியாலை செல்லக்கிளி அம்மான் விடமைப்புத் திட்டத்தில் திரு. கோ. நல்லையா தலைமையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. பரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டமான் திட்டத்திற்கு பதியுதீன் ஆட்சேபம்

வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ள "ஒன்றிணைந்த மாநில சபையும், முஸ்லிம் பிரதேச சபைகள் ஒன்றியமும்" என்ற பிரேரணை நியாயமான யோசனை அல்ல. முஸ்லிம்களுக்கு என முன் வைக்கப்படும் அலகு (யுனிட்) நிர்வாகத்தை நாம் ஏற்கத் தயாராயில்லை.

முன்னாள் கல்வி அமைச்சரும் இலங்கை முஸ்லிம்களின் தலைவருமான அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எனத் தனித்தனியாக இரு சபைகள் வேண்டும். அவ்விரு சபைகளையும் உள்ளடக்கிய பொதுவான ஒரு சபையின் கீழ் வடக்கு-கிழக்கு நிர்வாகம் கொண்டு நடத்தப்பட வேண்டும். —

அமைச்சர் தொண்டமான் முன் வைக்கும் யோசனை முஸ்லிம்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக்கும். வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களும் தமிழர்களைப் போல சம அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வழ வழி வகுக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள். — இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (அ-த)

## காணி, பிரதேச பாதுகாப்பு, நிதி-நிர்வாக அதிகாரங்களுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு சுயாட்சி; முஸ்லிம்களுக்கு பிரதேச சபை ஒன்றியம்

### தொண்டா யோசனை

கொழும்பு, அக். 22

"இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் ஒன்றுதான் அர்த்தமுள்ள ஏற்றதான நடைமுறை என்பது புலனாகின்றது.

இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு சுயாட்சி வழங்கவேண்டும். அதுவே இனப்பிரச்சினை தொடர்பாக செயற்படுத்தக் கூடிய ஒரே தீர்வாகும்.

வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைத்து, முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்குவதற்கு முஸ்லிம் பிரதேச சபைகள் அடங்கிய தனி ஒன்றியம் ஒன்றும் நிறுவப்படவேண்டும்."

கொழும்பு, மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில், "இலங்கையின் இனப் பிரச்சினை" என்ற [illegible] வில் [illegible] திரு எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

இஸ்லாமிய நிலையத்தின் தலைவராக விளங்கும் சபாநாயகர் அல்ஹாஜ் எம். ஏ. முகமது இந்தக் கூட்டத்திற்கும் தலைமை வகித்தார்.

அமைச்சர் தொண்டமான் [illegible] பேச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Honda C 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 31 கண்டி வீதி, கண்டிக்குளி [லக்ஷ்மி அச்சகம் அருகாமையில்] யாழ்ப்பாணம். [18515]

தமிழ் பழைய ஸ்போட் [ரெமிங் டன்] தட்டச்சு இயந்திரமும் மற்றும் ஐந்து ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு R மருதலிங்கம் 8/1. அம்மன் வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம். [18503]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும்; தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும். பியூடோ, 39/17. மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [சி/0687]

### ஜோதிடம்

திருமணத் தடை, தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்றவைகள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாந்தியுடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்களுடன் யந்திரங்களும் வழங்குகின்றோம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர். ஸ்ரீமான் விநாயகர் சோதி நிலையம். [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி [146. பருத்தித்துறை வீதி] நல்லூர். [18513]

### வைத்திய சேவை

தலைமுடி உதிர்தல், தலைமயிர் நரைத்தல், தீராத தலைவலி, நரம்புத்தளர்ச்சி, தேக பருமன், குழந்தைகளின் ரோகங்கள், மாதவிடாய்க் கோளாறுகள் எதுவானாலும் கவலை வேண்டாம். இன்றே நாடுங்கள்! நலமடையுங்கள்!! டாக்டர் த. சிவானந்தன், D. A. M. R. A. M. P. [இலங்கை] சிவா வைத்திய சாலை, 384 கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [18482]

### விற்பனைக்கு

வீணை விற்பனைக்குண்டு. சுந்தரத்தினம், 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். [18526]




*University of Jaffna.*

**TENDER NOTICE**

Tenders are invited for writing identification numbers on items belonging to Faculty of Science. University of Jaffna [approximately 12,000 Nos]

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 28-10-1991 to 30-10-1991 on producing receipt from Bursar University of Jaffna for the following;

[a] Non-refundable deposit - Rs 250/-

[b] Refundable deposit - Rs 2 500/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 06-11-1991 at 10 00 a.m

Tender Board. University of Jaffna reserves the right to reject any tender.

– Registrar

University of Jaffna
Thirunelvely,
Jaffna

[C-0844]


## மூன்றாண்டுகளில் 2,250 படையினர் பலி

கொழும்பு, அக் 22

வடக்கு - கிழக்கில் கடந்த மூன்றாண்டுகளில் 1,750 ஆயுதப் படையினரும் குறைந்தது 500 பொலிஸாரும் உயிரிழந்தனர் என்றும் —

அவர்களின் குடும்பத்தினருக்கு அரசு 26 கோடி 25 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கியிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. [த-எ]

## களனி பல்கலைக்கழக மருத்துவ பீடம்

கொழும்பு, அக். 22

கொழும்பு வடக்கு மருத்துவக் கல்லூரி, களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடமாக அப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை ஒத்து சென்ற வாரம் 130 மாணவர் முதலாவது தொகுதியாக மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-10)

## இறந்தவர் தொகை 1,500 ஆக அதிகரிப்பு

புதுடில்லி, அக் 22

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்நூறுக்கும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுவதாக இந்திய வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

உத்தரகாசி மாவட்டத்தில் மட்டும் குறைந்தது 250 பேர் இறந்துள்ளனர்.

இந்தப் பூமி அதிர்ச்சியில் நானூறுக்கும் அதிகமான கிராமங்கள் பாதிக்கப்பட்டன என்றும் —

உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறைத் தாண்டும் என்றும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நேற்றுத் தெரிவித்தது. 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். [உ-எ-த-5]

## நாட்டு வெடிகுண்டுக்கு ஒருவர் பலி!

சென்னை, அக் 22

தமிழ்நாடு சிதம்பரனார் மாவட்டம் குளத்தூர் அருகே, நாட்டு வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் நாட்டு வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டவர்களே விபத்துக்கு உள்ளானார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. (ச)

## தேவை

இரவு நேர மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் [Ex-Servicemen] முன்னர் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிப்போர்

15. இரண்டாவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

[C/0841]

## யாழ். வர்த்தகர் சங்கம்
## முக்கிய அறிவித்தல்

யாழ். நகர் சகல வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் / கருத்தரங்கு 23 - 10 - 91 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்களால் நடத்தப்படும்.

நகைக்கடை, ஆங்கில மருந்துக்கடை உட்பட **சகல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களும் இக் கலந்துரையாடலில் தவறாது நேரில்** பங்கு பற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
யாழ். வர்த்தகர் சங்கம்.

யாழ்ப்பாணம். [18524]

## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

யாழ். பிராந்திய நிலையத்தின் பெரும்பாலான மாணவர்களின் தொடர்புகள் ஒழுங்காக இல்லாதபடியால் எல்லா மாணவர்களையும் அக்டோபர் மாதம்

**25, 26 ஆம் திகதிகளில் (வெள்ளி அல்லது சனி)**

யாழ். பிராந்திய நிலையத்தில் காலை 9 00 மாலை 4 00 மணிகளுக்கிடையே தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தேர்வுகள் நடத்துவதற்கும் இயன்றளவு மீள் பதிவு செய்தல் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

**யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மாணவர்களைக் சந்தித்து ஆலோசனை வழங்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

அனைத்து மாணவர்களையும் (88, 89, 90, ஆண்டுகளில் பதிவு செய்தும், கற்கை நெறியினை பூர்த்தி செய்யாத மாணவர்கள் உட்பட] தவறாது 25 ஆம், 26 ஆம் திகதிகளில் (வெள்ளி அல்லது சனி) சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மு. தில்லைநாதன்,
உதவிப் பணிப்பாளர்.

பிறவுண் வீதி,
கொக்குவில், (18525)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 06 — 1987



மறைவு: 22 — 10 — 1990

**செல்வன் ச. அட்சயன்**

என்றும் உன் நினைவாகவே வாழும்:
அப்பா, அம்மா, அண்ணா.

வைத்தி வீதி, [illegible] [13139]

## கடத்தல் லொறிகளுக்கு பாதுகாப்பாக வந்த மந்திரி!
### இப்போது லலித் குழுவில்

கொழும்பு, அக். 22

வடபகுதிக்குக் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்ட சில பொருள்களைக் கடத்துவதற்கு முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஒருவர் உதவினார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றி வந்த லொறிகளுக்குப் பாதுகாப்பாக அவர் தமே கொழும்பில் இருந்து தாண்டிக்குள தடை முகாம் வரை கூட வந்திருந்தார் என்றும் விசாரணை மூலம் தெரியவந்திருக்கிறதாம்.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக, பல இராணுவ அதிகாரிகளை இரகசியப் பொலிஸார் விசாரித்து வருவதாகவும், அவ்விசாரணைகளிலிருந்து பல தகவல்கள் வெளிவந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

சம்பந்தப்பட்ட முன்னாள் ராஜாங்க அமைச்சர் இப்போது லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழுவில் அங்கம் வகிக்கிறார்.

கேகாலை மாவட்ட எம்.பியும், புனர்வாழ்வு புனர்நிர்மாண முன்னாள் ராஜாங்க அமைச்சருமான திரு. வின்சென்ட் பெரேராவே அவர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராகச் சில காலம் பணிபுரிந்திருந்தார். அவ்வேளையிலேயே இக்கடத்தல் சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

இருபதாயிரம் பெரிய பெட்டிகளில் கற்பூரம், 25 ஆயிரம் கிலோ கற்பூரத் தூள், 150 'றீம்' வெள்ளைக் கடதாசி, 1000 "றீம்" சிறந்த ரகக் கடதாசி, 1000 "றீம்" அட்டைக் கடதாசி, 2000 "றீம்" ரோணியோ கடதாசி, 20 ரின் அச்சிடும் மை ஆகியவையும் முன்னாள் அமைச்சரின் பாதுகாப்புடன் மே மாதம் 25 ஆம் திகதி கடத்தப்பட்ட பொருள்களில் சில என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-த)

## தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் திரும்புவர்

இந்தியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து இந்தியாவும், இலங்கையும் உடன்பாடு கண்டிருப்பதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் திரு என் என் ஜா. பி. ரி. ஐ. செய்திஸ்தாபனத்துக்கு தெரிவித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு பேர் கொண்ட அணிகளாக 2 ஆயிரம் அகதிகள் இங்கு அனுப்பப்படுவார்கள் என்றும் —

மேற்படி அகதிகளின் விவரப்பட்டியல் ஏற்கனவே இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் திரு. ஜா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகளை திருகோணமலையில் வரவேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்ப இலங்கை அதிகாரிகள் தயாராக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த-5]

## ஜப்பான் இலங்கைக்கு 40 கோடி ரூபா கடன்

கொழும்பு, அக். 22

ஜப்பான் இலங்கைக்குக் கடனாக 40 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இராணுவத் தளபாடங்கள் மற்றும் பாம்பீசப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தப்படக்கூடாது என்ற நிபந்தனையுடனேயே இக் கடன் வழங்கப்படுகிறது.

பொருளாதார புனரமைப்புத் திட்டங்களுக்குச் செலவிடவே இக்கடன் வழங்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருள்களை வாங்கவே இக்கடன் பயன்படுத்தப்படும் என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். [த-எ]

## துரோகிகளின் இறுதி முடிவு அரசியல் தற்கொலையே
### ஜனாதிபதி பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, அக். 22

ஐக்கிய தேசியக் கட்சிக்கு துரோகிகளாக மாறுவோருக்கு நிச்சயமாக அது ஓர் அரசியல் தற்கொலையாகவே முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்தார்.

மக்கள் அரசியல்வாதிகள் மீது இப்போதெல்லாம் தனிநபர் வழிபாடு செலுத்துவதில்லை. அவர்கள் இப்போது கட்சிக்கே வாக்களிக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதால், ஐ. தே. க. தொடர்ந்தும் இருக்கும். எனவே கட்சியைவிட்டு வெளியேறுவோரின் அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றும் அவர் சொன்னார். [த]

## அறிவித்தல்

இன்று 22 - 10 - 1991
யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில்
பிற்பகல் 2 மணிக்கு

# "இலங்கை வேந்தன்"

(இசை, நடன, நாடகம்)
நடைபெறும்.

[18522] – நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆஸ்பத்திரிப் படுகொலைகள்

நான்கு வருடங்களுக்கு முன்னர் அக்டோபர் 21, 22 ஆம் திகதிகளில் நடந்த மிகக் காட்டுமிராண்டித் தனமான சம்பவம் ஒன்று ஈழத் தமிழர்கள் எல்லோரின் நெஞ்சங்களையும் என்றும் நெருடுவதாகும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளர்கள், அவர்களுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் மற்றும் உதவியாக இருந்த ஊழியர்கள், பொதுமக்கள் என்போர் படுகொலை செய்யப்பட்ட அந்த அநாகரிகச் சம்பவம் என்றும் சோக நினைவுகளை மூட்டி நிற்கவே செய்யும்.

உயிர் காக்கும் உத்தமப் பணி புரிபவர்கள் டாக்டர்கள். மற்றவர்களின் உடல் உபாதைகளைத் தமக்கு நேர்ந்ததாக வரித்துக் கொண்டு, அந்த உணர்வுடன், தமது அறிவையும் திறமையையும் அர்ப்பணித்து உழைப்பவர்கள் அவர்கள். அதனால் வைத்தியசாலைகள் ஆலயங்களாகக் கருதப்படுகின்றன.

சர்வதேசங்களிலும், வைத்தியசாலைகள், பாடசாலைகள் ஆகியவை ஆண்டவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் தெய்வாலயங்களாக மதிக்கப்படுபவை. மகிமையும் கீர்த்தியும் உள்ள தலங்களாகக் கணிக்கப்படுபவை.

ஆனால் ஆசியாவின் புண்ணிய பூமியாக, தெய்வீக பூமியாக முன்னர் ஒரு காலத்தில் மிளிர்ந்த இந்தியாவில் இருந்து, அமைதிகாக்கும் படை என்ற பெயருடன் வந்த இராணுவத்தினர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மனிதகொலைக் களமாக மாற்றினார்கள்.

அவர்களின் கைகளில் இருந்த ஆயுதங்களும், நெஞ்சுகளில் கனன்ற மூர்க்கத்தனமும் அவர்தம் பண்பாட்டையும், சிறப்பையும் மறைத்தன. வைத்தியசாலை என்னும் ஆலயத்தில் வைத்து நரபலி எடுத்தார்கள். நோயாளர்கள், டாக்டர்கள், ஊழியர்கள் ஆகியோரை — ஆயுதம் இல்லாமல் இருந்த அப்பாவிகளை — நிராயுதபாணிகளை, கோழைகளாக மாறி — யுத்தப் பண்பை மறந்து — சுட்டுத் தள்ளினார்கள்.

ஹிட்லர் ஆட்சியில், நாசிச வெறியர்களினால்தான் பயங்கர மனிதக் கொடுமைகளும், கொலைகளும், இம்சைகளும் நடந்ததாக மேற்கோள் காட்டப்படுவது வழக்கம். அந்த நிலையை மாற்றி, யாழ் வைத்தியசாலையில் இந்திய இராணுவம் புரிந்த படுகொலைகளை மேற்கோள் காட்டும்அளவுக்கு வரலாற்றில் அவர்களே கறை பூசினார்கள்!

வெளிநாட்டு இராணுவம் ஒன்று, வேற்று நாட்டு மக்களை எவ்வாறு இம்சைப்படுத்தி, கொடுமைகள் புரிந்து ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கும் என்பதற்கு யாழ். வைத்தியசாலைப் படுகொலைகள் உகந்த சான்று.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலங்கா இராணுவமும் வெளிநாட்டு இராணுவம்போலவே இயங்கி வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விவகாரம். வீடுகள், ஆலயங்கள், அகதி முகாம்களில் புகுந்து இராணுவத்தினர் தமிழரைக் கொன்று குவிப்பது சர்வ சாதாரணமாகி விட்டது. ஆகப்பிந்திய உதாரணம் கொக்கட்டிச் சோலை.

தமிழர்களுக்கென்று தனியான அரசும், ஆட்சியும் பாதுகாப்பும் உருவாகும் வரை இது போன்ற இராணுவக் கொடுமைகளை மக்கள் அனுபவிக்கும் நிலை தொடரவே செய்யும்!

# தீவக மக்களுக்கு நாளை உலர்உணவு!

யாழ்ப்பாணம், அக். 22

புங்குடுதீவு — நயினாதீவு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம் நாளை முதல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக புங்குடுதீவு — நயினாதீவு ப.நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

1 ஆம், 2 ஆம், 3 ஆம் கிளைகளுக்குரியவர்களுக்கு சிறாம்பியடி மணியம் கட்டடத்திலும் —

5 ஆம், 6 ஆம், 7 ஆம் கிளைகளுக்குரியவர்களுக்கு கே. கே. எஸ். வீதியில் உள்ள ஹனிபா கட்டடத்திலும்—

9, 10, 12, 13, 14, 15, 16 ஆம் கிளைகளுக்குரியவர்களுக்கு ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள இரு கிளைகளிலும் — உலர் உணவு விநியோகம் நடைபெறும்.

## மட்டக்களப்பில் தாக்குதல்

கொழும்பு, அக். 22

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் உள்ள பொலிஸ் பாதுகாப்பு நிலை மீது நேற்று முன்தினம் துப்பாக்கி மற்றும் கிரனேட்டுகள் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ-3]

# வடக்கு-கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் என்று சபாநாயகர் தமது தலைமையுரையில் புகழாரம் சூட்டினார்.

அமைச்சர் தொண்டமான் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

வடக்கு - கிழக்கில் பிரச்சினையை ஒத்திப் போடவும் முடியாது; தட்டிக் கழிக்கவும் முடியாது; இனிப்பான பேச்சுக்கள் மூலமும் உபயோகமற்ற வாக்குறுதிகள் மூலமும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது.

கூட்டங்களும் தொடர் மாநாடுகளும் நடத்துவதன் மூலமும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. சாத்தியமானதும் திடமானதுமான அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இனப்பிரச்சினை தற்போது அரசுக்கும் இளைஞர்களுக்கும் இடையேயான பலப்பரீட்சையாக மாறி உள்ளது. இதில் யாரும் வெற்றி பெறும் நிலையில் இல்லை. சாதாரண மக்களே சாகிறார்கள். இந்த நிலையை மாற்றப் போகிறோமா? அல்லது பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமா?

இதனை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இதுவிடயத்தில் பொதுசன அபிப்பிராயம் ஏற்படவேண்டும்.

இந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டுமென நிர்ணயிக்க, இ. தொ. கா. தலைவராக, அமைச்சராக இருந்தாலும் எனக்கும் உரிமை உண்டு. எனது கட்சிக்கும் உரிமை உண்டு.

சிறுபான்மை மக்கள் தங்களது சொந்தப் பிரதேசமென்று கூறத்தக்கதாக வடக்கு—கிழக்கு மாகாணம் தனிநாடாக அமைய வேண்டும் என்பதே போராட்டத்தை நடத்துபவர்களின் இலட்சியமாகும்.

ஒரு தனி அரசுக்கு உள்ள சகல அதிகாரங்களும், வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு ஓர் அரசியல் ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படுவதோடு — உத்தரவாதமுள்ள எதிர் காலத்திற்கு உறுதியளித்து, அவர்களுடைய நிலப்பிரதேசம் தலையீடு எதுவுமின்றி பாதுகாக்கப்படுவதற்கான உதவியும் அளிக்கப்படவேண்டும். -இதுவே அவர்களுடைய கோரிக்கையாகும்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இணைப்பு இன்றியமையாதது;

★ வடக்கு - கிழக்கு மக்களின் பாதுகாப்பு அவர்களால், அவர்களுடைய மாகாண சபையால் கண்காணிக்கப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்ய மாகாண சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

★ நிதிய நிர்வகிக்கவும், நிதி ஸ்தாபனங்களை தோற்றுவிக்கவும் அதற்கு உரிமையும், அதிகாரமும் இருக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு ஆட்சியும் அதிகாரமும் வழங்கப்படும் பட்சத்தில் அந்த மாகாணத்தில் உள்ள சிறுபான்மை மக்களின் நில உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்,

இந்த உத்தரவாதத்தை அளிப்பதற்கு அரசியல் சட்டரீதியான பாதுகாப்பும், நிர்வாக அமைப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பின்வரும் துறைகளில் விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டும்:

★ நிலம் ★ சட்டமும் ஒழுங்கும் ★ நிதியும் நிதி ஸ்தாபனங்களும் ★ கல்வியும் கலாசாரமும் ★ விவசாயம் ★ கைத்தொழில் ★ வர்த்தகம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமுலாகும் அரசியல், நிர்வாக நடைமுறைகள் பெரும்பான்மை மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும் உள்ள நலவுரிமை நாட்டங்களைச் சமன் செய்வனவாக அமைய வேண்டும்.

★ கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பிரதேசங்களில் முஸ்லிம் பிரதேச சபைகள் அமைய வேண்டும்.

★ இப்படி அமையும் முஸ்லிம் பிரதேச சபைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து முஸ்லிம் பிரதேசசபைகளின் ஒன்றியம் (Union of Muslim Sabahs) என்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

★ முஸ்லிம் பிரதேச சபைகள் ஒன்றோடு ஒன்று நிலரீதியாக அடுத்திருக்க வேண்டும் அல்லது தொடுத்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

★ முஸ்லிம் பிரதேச சபைகளின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் எல்லாம் ஒன்றியத்தினால் நிர்ணயிக்கப்படும்.

★ இந்த ஒன்றியத்தில் மாகாண சபையில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்களும், முஸ்லிம் பிரதேச சபைகளின் தலைவர்களும் அங்கம் வகிப்பர்;

★ வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் அங்குள்ள சிறுபான்மை இனங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

★ மாகாண நிலக் கமிஷனிலும் சிறுபான்மை இனங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

★ பகிரங்க சேவைக் கமிஷனிலும் முஸ்லிம்களுக்கு இடமளிக்க வேண்டும்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களுக்கு எல்லா வகைகளிலும் பெரும்பான்மை இனத்துடன் சமநிலையும், சம அந்தஸ்தும் வழங்கப்படவேண்டும்.

எந்தச் சட்ட திட்டமும் உரிய பலனை அளிக்கமாட்டாது. எல்லா இனமக்களுக்கும் மிடையிலான புரிந்துணர்வும், நல்லெண்ணமுமே வேண்டப்படுவதாகும்— இவ்வாறு திரு. தொண்டமான் கூறினார். [அ]

## ஆசிரியருக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 22

''தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்ற வசதிகளை செய்து கொடுக்க அவ்வப்பகுதி ஆசிரியர்கள், அதிபர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.''

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இடம்பெயர்வோரின் உடல், உள வலுக்குன்றாத வகையில் பணியாற்ற வேண்டிய அவசியத்தைச் சகலரும் உணர வேண்டும் என்றும் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [அ-3]

## பலாலியிலிருந்து ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், அக். 22

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 5 மணியளவில் சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே கலிபர் தாக்குதலும் இடம்பெற்றது. சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ-15)

## 85 தம்பதியருக்கு திருமணப்பதிவு

யாழ்ப்பாணம், அக். 22

அளவெட்டி கும்பிளாய்ப் பகுதியில் 85 தம்பதியருக்கு நேற்று சட்டபூர்வ திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

சம்பிரதாய முறைப்படி திருமணம் செய்த பின்னரும்—சட்ட ரீதியாகப் பதிவுத் திருமணம் செய்யாமல்—இருப்போருக்கே நேற்று திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

திருமண நாளான நேற்று சுபநேரத்தில் பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன.

சம்பிரதாய பூர்வமாகத் திருமணம் செய்து, நீண்ட காலம் குடும்ப வாழ்க்கை நடத்திய முதியவர்களும் நேற்று பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

அவர்களுக்குரிய திருமணப் பதிவுச் சான்றிதழ்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ் டிவகரலா வழங்கினார்.

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக். 22

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, பிரதேச சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் விழாவை நாளை புதன்கிழமை நடத்துவதற்கு முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (அ)

## டிராக்டர் மீது ஹெலி சூடு!

தென்மராட்சி, அக். 22

நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் நுணாவில் பகுதியில் தென்னை ஓலை ஏற்றிச் சென்ற டிராக்டர் மீது ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. பெரும் சேதம் எதும் ஏற்படவில்லை.

## குருநகர் மீன்வாடி இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், அக். 22

குருநகர் மீன்வாடி பாதுகாப்புக் காரணங்களுக்காக நடற்கரை வீதி— பழைய பூங்கா வீதிச் சந்திக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

குருநகர் மீன்வாடிக்கு நேர் எதிரில் மண்டைதீவுக் கரை தெரிவது குறிப்பிடத்தக்கது. (உ-த)

## தார் பீப்பாய் வெடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 22

தார்ப் பீப்பாய்க்கு நெருப்பு மூட்டிய போது, அருகில் மூடிய நிலையில் கிடந்த மற்றொரு வெற்றுத் தார்ப் பீப்பாய் சூடேறி வெடித்துச் சிதறியது. ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணிக்கு மாங்குளத்தில் இடம்பெற்றது.

காயமடைந்த அருணாசலம் ஞானசேகரம் (வயது 17) யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## துருக்கியில் ஆளும் கட்சி தோல்வி

அங்காரா, அக். 22

துருக்கியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் தாய்நாடு கட்சி தோல்வியடைந்தது கூடுதல் ஆசனங்களைப்பெற்ற பிரதான எதிர்க்கட்சியான ட்ருஸ் கட்சி சிறிய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டரசு ஒன்றை அமைக்கும் சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## ஆஸ்பத்திரி ஊழியர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், அக். 22

யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகிய 21 பேரினதும் நான்காவது நினைவு தினம் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் நினைவு கூரப்பட்டது. (உ)

## யாழ். நகரில் வழமை நிலை

கடந்த சில நாட்களாக பதற்ற நிலவிய யாழ். நகரில் நேற்று வழமை நிலை திரும்பியது வர்த்தக நிலையங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் வழமைபோல் செயற்பட்டன. மக்கள் நடமாட்டமும் காணப்பட்டது. (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்புசாமி புறப்படுகின்றார்

கொழும்பு, அக். 22

அகில இந்திய வானொலியின் செய்தியாளர் திரு. ஏ. கருப்புசாமி நேற்று இலங்கையை விட்டுப் புறப்பட இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

அவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி இலங்கை அரசு விடுத்திருந்த 4 நாள் அவகாசம் முடிவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பதாகவே அவர் நாட்டை விட்டுச் செல்கின்றார் என்று அறிவிக்கப்பட்டது. [உ-த]

## சுன்னாகம் விபத்தில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 22

சுன்னாகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் 5 பேர் படுகாயமடைந்தனர். சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தலையில் படுகாயமடைந்து நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் யார் என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இவர்களைத் தவிர சைக்கிளில் வந்த மூவர் காயமடைந்தனர்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகத்தில் குடியிருக்கும் தில்லையன் மணிவண்ணன் [வயது 30], இராசதுரை ரஜினிகாந்த் [வயது 11], மாணிக்கமணி சுதாகர் [வயது 8] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் சுதாகர் இடது கால் முறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றைய இருவரும் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15)

## 42 பேர் நேற்று விடுவிப்பு

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 பேர் நேற்றுப் பகல் ஒரு மணியளவில் கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன், மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா, யாழ். மாவட்ட மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி (ஆஞ்சநேயர்) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். [உ-5]

## பாடசாலைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், அக். 22

யாழ். குடாநாட்டில் பெரும்பாலான பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

பாடசாலைக்கு வந்த ஒரு சில மாணவர்களும், ஆசிரியர்களும் நேரத்துடனேயே திரும்பிச் சென்றனர்.

சில பாடசாலைகள் அகதி முகாம்களாக இயங்குவது தெரிந்ததே. (உ-51)

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் கூட்டம்

போர்க்கால சூழ்நிலையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுத் தொண்டர்கள் மேற்கொள்ள வேண்டிய சேவைகள் குறித்து ஆராய விசேட கூட்டம் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும்படி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுத் தொண்டர்கள் அனைவருக்கும் படைப்பிரிவின் யாழ். பிரதேச அத்தியட்சகர் அழைப்பு விடுத்திருக்கிறார். (உ-15)

## மரண அறிவித்தல்

### குருநாதர் கிருஷ்ணமூர்த்தி

குருநாதர் கிருஷ்ணமூர்த்தி 18-10-91 அன்று ஜேர்மனியில் உள்ள டியூஸ்பேர்க் நகரில் அகால மரணமானார்.

இவர் உரும்பராய் கிழக்கு காலஞ்சென்ற குருநாதர் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், தவபத்மதேவி, பூரணச்சந்திரன் [மருந்து கலவையாளர், வட்டுக்கச்சி], டாக்டர் மீனாட்சி அம்பாள், அருச்சுனராசா [உதயன் பணிமனை], பவளக்கொடி, பாலகிருஷ்ணன், இலகுவகுமாரன், இந்திரகுமாரன் [மக்கள் வங்கி, பரந்தன்] சந்திரதேவி பூமாதேவி ஆகியோரின் சகோதரரும், யோகராசா, சந்தசாமி, ஜெயபாலினி, பாலசுப்பிரமணியம், மகேந்திரன் [இலங்கை வங்கி, கிளிநொச்சி] ஆகியோரின் மைத்துனருமாவாரர்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலகிருஷ்ணன்

பத்திரிகை ஏஜன்ட்,
143, பாலா ஸ்ரோர்ஸ்,
உரும்பராய் கிழக்கு. (சி/0845)

# ஜேர்மனியில் உள்ள அகதிகளுக்கு முழுப் பாதுகாப்புத் தரமுடியாது!

## தூதரகப் பேச்சாளர் கவலை

கொழும்பு, அக். 22

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள வெளிநாடுகளைச் சேர்ந்த கறுப்பின மற்றும் வெள்ளையரல்லாத அகதிகளின் நிலைமை பயங்கரமானது என்பதை நாம் அறிவோம். எனினும் அவர்களுக்கு நூறு சதவீத பாதுகாப்பை வழங்க முடியாதிருக்கிறது என்று கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இவ்வகதிகளுக்கு எதிரான வன்செயல்களைக் கட்டுப்படுத்த சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் ஜேர்மன் அரசு எடுத்து வருகிறது.

எனினும் அங்கு நிலவரம் மிகவும் துக்ககரமாகவும், பயங்கரமாகவும் உள்ளது என்றும் அந்தப் பேச்சாளர் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

முன்னர் கிழக்கு ஜேர்மனியாக விருந்த பகுதியில் உள்ள வேலையில்லாத இளைஞர் குழுக்கள் இவ்வன்செயல்களின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன.

இப்போது இவ்வன்செயல்கள் அச்சப்படக்கூடிய விதத்தில் நாடு முழுவதும் பரவிவிட்டன.

கறுப்பின மற்றும் வெள்ளையரல்லாத வெளிநாட்டு இராஜதந்திரிகளும் நாஸி குழுக்களின் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று கூறப்படுவது வெறும் வதந்தான்.

இராஜதந்திர சமூகத்திற்கு உலகில் வேறெந்த நாட்டிலும் வழங்கப்படாத பாதுகாப்பு, ஜேர்மனியில் வழங்கப்பட்டிருக்கிறது.

எனினும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் மீது இக்குழுக்கள் தாக்குதல் நடத்தும் ஆபத்து உண்டு என்பதை மறுப்பதற்கில்லை— என்று தெரிவித்தார். (அ-எ)

## அதிருப்தியாளர் கூட்டத்துக்கு மகாவலி வாகனத்தில் ஆட்கள்!

கொழும்பு, அக். 22

"மகாவலி அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான வாகனங்கள் ஜே. வி. பியினரால் அழிக்கப்பட்டதாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் அவற்றில் ஒன்று இப்போது அதிருப்தியாளர்களின் கூட்டங்களுக்கு ஆட்களை ஏற்றிச் செல்ல உபயோகிக்கப்படுகிறது. அதனைப் பொலீசாரையும், மெய்யுமாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. பிரேமதாசா கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் பேசுகையில் திரு. பிரேமதாசா மேலும் தெரிவித்ததாவது:-

துறைமுகத்தில் இடம்பெற்று வந்த பல மோசடி நடவடிக்கைகளும் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.

இப்போது ஒருவரின் சகபாடியாக மாறியுள்ளவர், முன்னர் அவர் குறித்து பல கேள்விகளை எழுப்பினார். இப்போது அவர் 50 லட்சம் ரூபா பெறுமதியான சொத்தை எப்படிச் சேர்த்தார் என்பதற்குப் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

இவர், வந்து சேர வேண்டிய மூன்றாவது கப்பல் ஒன்று பற்றிய விசாரணையிலும் பதிலளிக்க வேண்டியவராகவும் உள்ளார்— என்றார். [அ-த]

## சிவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றது.

ஆனால் வடக்கு, கிழக்கில் தனிநாடு அமைப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது விடுதலைப் புலிகளுக்குத் திட்டவட்டமாக எடுத்துக் கூறப்பட்டது.—என்று ஜனாதிபதி கூறினார். (அ-த-5)

## முப்படைகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளின் நிலைகள் அழிக்கப்பட்டுவிட்டதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி இலங்கை வானொலி நேற்று மாலை அறிவித்தது.

யாழ். கோட்டை மற்றும் தொலைத் தொடர்பு நிலையச் சுற்றாடலில் உள்ள இத்தகைய நிலைகளையே, விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் உதவியுடன் படையினர் நிர்மூலமாக்கினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

### காலை அறிவிப்பு

ஆனால் நேற்றுக் காலை இலங்கை வானொலி தனது அறிவிப்பில் —

"ஒபரேஷன் வலம்புரி" நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் படையினர் யாழ்ப்பாணம் முழுவதிலும் அரசின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு வசதியாகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில் தம்மைத் தயாராக வைத்துள்ளனர் — என்று தெரிவித்தது.

காரைதீவிலிருந்து ஊர்காவற்றுறை வரையுள்ள எட்டுத் தீவுகளும், கச்சதீவும் தற்போது பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்றும்—

கீரிமலையிலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிகளும், தெல்லிப்பளை, வயாவிளான், பலாலி உட்பட மற்றும் பல பகுதிகளும் படையினரின் ஆதிக்கத்தில் இருப்பதாகவும் அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-3-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் [illegible] பட்டது.

## தமிழரை தண்டவாளத்தில் படுக்க வைத்த நாஸிக் குழு!

### அவர் ரயிலில் சிக்கி கால் இழந்தார்

பொன், அக். 22

நாஸி குழுவினரால் தாம் தாக்கப்பட்டதாக இலங்கைத் தமிழ் அகதியான செங்கரன் ராதாகேசன் என்பவர் ஜேர்மன் அதிகாரிகளிடம் முறையிட்டிருக்கிறார்.

மூன்று பேர் தமக்கு பலவந்தமாக போதை வஸ்துவை ஊட்டியதாகவும்—

பின்னர் தம்மை ரயில் தண்டவாளத்தில் படுக்க வைத்ததாகவும்— அப்பகுதியில் வந்த ரயில் மோதியதால் தாம் கால் ஒன்றை இழக்க நேரிட்டதாகவும் ராதாகேசன் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

நாஸி குழுவினர் முன்னர் ஒரு சம்பவத்தில் ஆபிரிக்க அகதி ஒருவரை உயிரோடு எரித்துக் கொன்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## இடம்பெயர்ந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கலந்துரையாடலில் இறுதியான முடிவு எடுக்கப்பட்டது.

பிரஸ்தாப கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு:

★ புங்குடுதீவு, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு, யாழ்ப்பாணத்தில் வைத்து புங்குடுதீவு, வேலணை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் உலர் உணவு விநியோகிக்கப்படும்.

★ தற்போது முகாம்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோருக்கு, அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் தயாரிக்கும் பட்டியலின் பிரகாரம், அதே பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் உலர் உணவு விநியோகிக்கப்படும்.

★ கொட்டடி, நாவாந்துறை பகுதிகளில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு அவர்கள் தற்போது தங்கியுள்ள பிரிவுகளின் உதவி அரச அதிபர்களினால் தயாரிக்கப்படும் பட்டியலின் அடிப்படையில் ஒரு வார இலவச உலர் உணவு வழங்கப்படும்.

★ வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களில் பலர் தற்போது மீளவும் தமது பகுதிகளுக்குத் திரும்பிச் செல்வதால், அவர்களுக்கு ஒரு வாரத்துக்கு மட்டுமே உலர் உணவு விநியோகிப்பது.

★ தீவகப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வாரத்துக்குக் கூடுதலாகவும் தொடர்ந்து உலர் உணவு விநியோகிப்பது பற்றி விரைவில் தீர்மானிக்கப்படும்.

இடம் பெயராத மக்களுக்கு உலர் உணவு விநியோகிப்பது பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-5]

## சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படும் அபாயம்!

கொழும்பு, அக். 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பு வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே பல உட்பூசல்கள் நிறைந்திருக்கும் அந்தக் கட்சிக்குள், அனுரா ஆதரவாளரான திரு. சூரியப்பெரும செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை மேலும் நிலைமையை மோசமாக்கி உள்ளது.

அனுராவுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கக் கோரும் விடயம் மீண்டும் பெருவடிவம் எடுத்து வருவதால் சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பிளவு ஏற்படக் கூடும் என்றும் கூறப்படுகிறது. [ச]

## சிங்கள...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி, தமிழ்மக்களை விரட்டியடிக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. சகல மக்களும் போராட்டத்தில் இணைந்தால்தான் அதனை முறியடிக்க முடியும். சகலரும் இதை உணர்ந்து செயற்பட வேண்டும்—என்றார்.

கவிஞர் வாஞ்சிநாதன் மற்றும் மக்கள் முன்னணியைச் சேர்ந்த செல்வி ஜெயா, திருவாளர்கள் ரவி, அரசண்ணா உட்பட மற்றும் பலர் விழாவில் உரையாற்றினர். (அ-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org